## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் *(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)* அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 09.05.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

*தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஒதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:*

அல்லாஹ் கடந்த சில நாட்களில் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள மூன்று நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கான தவ்ஃபீகை எனக்கு வழங்கினான். இந்த சுற்றுப் பயணங்களில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை MTA வை பார்க்கின்ற ஒவ்வொரு கண்ணும் காண முடிந்தது. அல்லாஹ்வின் அருள்களின் மழை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் மீது இறங்குவதை அவர்களால் பார்க்க முடிந்தது. பல விஷயங்களும் ரிப்போர்ட் மூலம் வந்து கொண்டிருக்கின்றது. அவற்றில் சிலவற்றை நாம் வெளியிட்டுள்ளோம். சில அறிக்கைகள் இனி வெளியாகும். இன்ஷா அல்லாஹ். ஆனால், பெரும்பாலார் அல் ஃபஸ்ல் பத்திரிகையைப் படிப்பவர்களாக இல்லை. எனவே, அவர்கள் வரை இந்த ரிப்போர்ட்கள் சென்றடையாமல் இருக்கிறது. எனவே, எனது சுற்றுப் பயணத்தின் விபரங்களை எடுத்துக் கூற வேண்டும் என பல சகோதரர்களும் விரும்புகின்றனர். மாறாக, இது தொடர்பாக சில Fax-களும் வர ஆரம்பித்து விட்டன. எனவே, சுருக்கமாக இந்த எனது பயணத்தின் சில விபரங்களை உங்கள் முன் வைக்கின்றேன்.

கேமராவின் கண்கள் காண முடியாத சில விஷயங்களையும் கூற இருக்கின்றேன். அல்லது மக்களது உணர்வுகள் எப்படி இருந்தது என்பதை நான் கூற இருக்கின்றேன். இதனை முழுமையாக என்னால் வெளிப்படுத்த முடியாதென்றாலும் ஓரளவு அதைப் பற்றி கூற முடியும். அல்லாஹ்வின் அருளால் இது கிலாஃபத் ஜுபிலியை ஒட்டி நான் மேற்கொண்ட முதல் சுற்றுப் பயணமாகும். எந்தெந்த நாடுகளில் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டேனோ அந்த நாடுகளிலுள்ள ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் கூட மிகவும் உணர்வுடன் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளுக்காக தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள். இந்த மாநாட்டிற்காக தயாரிப்பை செய்வதில் சிலரது உணர்வுகள் எந்த அளவு வெளிப்பட்டுள்ளது என்பதை பார்க்கும் போது நான் வியப்படைகின்றேன். எந்த அளவு அவர்கள் தியாகங்கள் செய்துள்ளனர். எந்த அளவு அவர்கள் அன்பு காட்டுகின்றார்கள். எந்த அளவு அவர்கள் மனத்தூய்மையிலும், நன்மையிலும் முன்னேறியுள்ளனர். எந்த அளவு உலகத்தை விட மார்க்கத்திற்கு அவர்கள் முன்னுரிமை வழங்குகின்றார்கள் என்பதை இதன் மூலம் நாம் உணர முடியும். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எப்படிப்பட்ட தூய ஜமாஅத்தை வழங்கியுள்ளான். அவர்கள் பல்வேறு சமுதாயங்களிலிருந்து வந்துள்ளார்கள். அவர்கள் பல்வேறு நிறங்களை உடையவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது பழக்கவழக்கங்கள் பல்வேறு விதமாக இருக்கின்றது. ஆனால், அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதற்காக முஹம்மதிய மஸீஹின் கலீஃபாவிடம் இவர்கள் எத்தகைய பேரன்பை வைத்துள்ளனர் என்றால் அதன் காரணமாக மனிதன் உணர்வுகளின் தாக்கத்திற்கு ஆளாக வேண்டியது வருகிறது. இவ்வாறே நடக்க வேண்டியதிருக்கின்றது. ஏனென்றால், அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இதுபற்றி வாக்களித்துள்ளான். அவனோ நம்முடைய இறைவனாவான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இறைவனாவான். அவன் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இறைவனாவான். அவன் உண்மையான வாக்குறுதியை வழங்கியுள்ள இறைவனாவான். எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனான இந்த உண்மையானவனும் தனது வாக்குறுதியை நிறைவேற்றுபவனுமான அந்த இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நான் கண்ணியத்துடன் உமது புகழை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று வாக்குறுதி வழங்கியுள்ளான். மேலும் அவர்களை நோக்கி உமது புகழை நாம் உயர்த்துவோம். உம் மீதுள்ள

நேசத்தை உள்ளங்களில் போடுவோம் என்றும் கூறியுள்ளான். ஒவ்வொரு நாளும் ஒரு புதிய மகிமையுடன் அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி நிறைவேறுவதை நாம் பார்க்கின்றோம். இந்த ஆப்பிரிக்க சுற்றுப்பயணத்தின் போது அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி ஒரு சிறப்பான மகிமையுடன் நிறைவேறியதை நாம் பார்த்தோம் என்பதற்கு ஒரு உலகம் சாட்சியாக இருக்கின்றது. இது மறைவான ஒரு விஷயமல்ல. எதையும் மிகைப்படுத்தி நான் கூறவில்லை. கேமராவின் கண்கள் டெலிவிஷன் Screen-ல் ஒரு உலகிற்கு இந்த காட்சியைக் காட்டியது. பிரகாசமான பகல் போன்று அந்த காட்சி தெளிவாக காட்டப்பட்டது. ஆப்பிரிக்காவிலுள்ள மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரை கண்ணியத்துடன் தங்கள் உள்ளங்களில் அமர வைத்துள்ளார்கள். *குலாம் அஹ்மத் கீ ஜே* என்ற முழக்கத்தை தங்களுக்கே உரிய பாணியில் அவர்கள் கூறும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது புகழை கண்ணியத்துடன் எட்ட வைப்பேன் என்ற இறை வாக்குறுதி ஒரு சிறப்பான மகிமையுடன் நிறைவேறியதை நாம் பார்க்க முடிந்தது. நான் உனது புகழை உயர்த்துவேன் என்ற அல்லாஹ்வின் வாக்குறுதி ஒரு புதிய வகையில் முழக்கங்களின் வடிவத்தில் விண்ணில் அதிர்வை ஏற்படுத்தி விட்டது. ஈமானின் ஒளியால் நிரம்பியிருந்த ஆப்பிரிக்கர்களின் உள்ளங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், தங்களது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆகியோர் மீதுள்ள அன்பின் ஒளிக்கதிர்கள் வெளிப்படுவதை நம்மால் காண முடிந்தது. எந்த மனித முயற்சியாவது இந்த நேசத்தை உள்ளங்களில் போட முடியுமா? முகங்களிலுள்ள இந்த பொலிவும், கண்களிலுள்ள இந்த அன்பு, நேசம் ஆகியவற்றின் பிரதிபலிப்பும் உலகப் பேராசையின் காரணமாக ஏற்பட்டதாக கூற முடியுமா? ஏழைகளுக்கு பேராசை காட்டினால் நீங்கள் விரும்பியதை அவர்கள் மூலமாக செய்து கொள்ளலாம் என்று பொதுவாக கூறப்படுகிறது. ஆனால், பேராசையால் ஒருபோதும் அன்பு உருவாகாது. வெளிப்படையாகப் பார்க்கும்போது இந்த ஏழைகளிடம் உலக செல்வங்கள் இல்லை. ஆனால் அவர்கள் ஈமானின் செல்வங்களை பெற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்களுக்கு எந்த அளவு வேண்டுமானாலும் நீங்கள் பேராசை காட்டுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதுள்ள அன்பை இவர்களது உள்ளங்களிலிருந்து உங்களால் வெளியேற்ற முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதுள்ள அன்பினால் தனது எஜமானரான ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இவர்கள் வைத்திருக்கும் அன்பிற்கும், அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மீது இவர்கள் வைத்திருக்கும் அன்பிற்கும் ஈடாக உலகிலுள்ள எத்தகைய மகத்தான அன்பும் நேசமும் நிற்க முடியாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது இவர்கள் வைத்திருக்கும் அன்பின் காரணமாக இறைவன் இவர்களது தலை முதல் கால் வரையில் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மீதுள்ள நேசத்தால் இவர்களை நிரப்பி விட்டான். இத்தகைய அன்பின் ஒளிமிக்க உதாரணங்களாக ஆப்பிரிக்காவிலுள்ள அஹ்மதிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள் என்று எனக்கு தெரிகிறது. இந்த அன்பு இன்னும் பல அன்புகளின் அலைகளை உருவாக்குபம்டி அல்லாஹ் செய்வானாக!

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நபிமார்களுக்கு துணையாக இருப்பவர்கள் எப்போதும் பலவீனமான எளிமையான மக்களாகவே இருந்திருக்கின்றார்கள். பெரிய பெரிய மனிதர்கள் இந்த நற்பாக்கியத்திலிருந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருந்திருக்கின்றார்கள். இவர்களது உள்ளங்களில் பல்வேறு விதமான எண்ணங்கள் வருகின்றன. இப்படிப்பட்ட பெரிய மனிதர்கள் இந்த விஷயங்களிலிருந்து முதலிலேயே தாங்கள் விலகி இருப்பதாக கருதுகின்றனர். அவர்களிடமுள்ள பெருமையும் மறைமுகமான கர்வமும் இப்படிப்பட்ட பலவீனமானவர்கள் இருக்கும் சபைகளில் அமர்வது அவர்களுக்கு இழிவை ஏற்படுத்தக் கூடியது என்று அவர்கள் கருதுவதுடன், அதனை ஒரு மிகப்பெரிய குறையாக அவர்கள் நினைக்கின்றார்கள். அந்த சபைகளில் பலவீனமான ஏழைகள் இருந்தாலும்

இறைவனுக்கு பிரியமானவர்களே ஒன்று கூடுகின்றார்கள். இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் எனது ஜமாஅத்தில் இருப்பதை நான் பார்க்கின்றேன். அவர்களது உடலில் ஆடை இருப்பதை அரிதாகத்தான் பார்க்க முடியும். மிக அரிதாகவே போர்வை அல்லது பைஜாமா இவர்களுக்கு கிடைக்கின்றது. அவர்களுக்கென்று எந்த சொத்தும் இல்லை. ஆனால் அவர்களிடம் இருக்கின்ற எல்லையற்ற மனத்தூய்மையும், கொள்கைப்பிடிப்பும், அன்பும், நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதும் எனது இயல்பில் வியப்பை ஏற்படுத்துகின்றது. இவை யாவும் குறிப்பிட்ட நேரங்களில் இவர்களிடமிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அல்லது இதன் அடையாளங்கள் அவர்களது முகங்களிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் எந்த அளவு தங்களின் ஈமானில் உறுதியுள்ளவர்களாகவும் தங்களுக்கு இருக்கும் நிச்சய உறுதியில் உண்மையாக நிலைத்திருப்பவர் களாகவும் மனத்தூய்மையிலும், உண்மையிலும், நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதில் எந்த அளவு அவர்கள் முன்னேறியுள்ளனர் என்றால் இந்த செல்வச் செழிப்புமிக்க உலக இன்பங்களில் உள்ளத்தைப் பறிகொடுத்துள்ள செல்வந்தவர்களுக்கு இந்த ஏழைகளுக்கு கிடைத்துள்ள இன்பத்தைப் பற்றி தெரிந்திருந்தால் அவர்களும் அதற்குப் பகரமாக தங்களிடம் இருக்கும் அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக இருந்திருப்பார்கள்."

இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்றே அவர்களுக்கு அல்லாஹ் அளித்துள்ள வாக்குறுதிக்கு ஏற்ப இப்படிப்பட்ட அன்பு செலுத்துபவர்களை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியுள்ளான். பிறகு கிலாஃபத் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறும்போது "இந்த வாக்குறுதி உங்களைப் பற்றியதாகும்" என்றே கூறியுள்ளார்கள். இவ்வாறு பின்னர் தோன்றிய மக்களது உள்ளங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதுள்ள நேசத்துடன் கிலாஃபத் மீதுள்ள நேசத்தையும் அல்லாஹ் உருவாக்கி விட்டான். மேலும் ஆப்பிரிக்காவிலுள்ள இந்த ஒளிமயமான உள்ளங்களிலுள்ள அன்பை நீங்கள் கண்டு கொண்டீர்கள். இப்போது நான் சுருக்கமாக சில சம்பவங்களை உங்களுக்கு கூறுகின்றேன்.

இந்தப் பயணத்தில் முதலாவதாக நான் கானா சென்றிருந்தேன். கானாவில் ஏர்போர்ட்டில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியை நீங்கள் பார்த்திருக்கின்றீர்கள். இரவு நேரமாக இருந்ததால் அங்குள்ள அஹ்மதிகளின் உணர்வுகளை கேமரா உங்களுக்குக் காட்டியிருக்கும் என்றே நான் கருதுகின்றேன். ஆனால், அந்த கண்களிலுள்ள அன்பை அங்குள்ளவர்களால் மட்டுமே பார்க்க முடிந்தது. இந்த நாட்டின் தலைநகரமான அக்ராவில் நமது ஜமாஅத்தின் தலைமையகம் இருக்கின்றது. அங்கு தான் நான் முதலில் சென்றேன். ஆனால் மாநாடு அங்கிருந்து 30 அல்லது 40 மைல் தொலைவிலுள்ள ஒரு புதிய இடத்தில் நடக்க இருந்தது. எனவே, அடுத்த நாளே அந்த புதிய இடத்திற்கு நாங்கள் சென்று விட்டோம். நெடுஞ்சாலை(High way)யில் அமைந்திருந்த 460 ஏக்கர் பரப்பிலுள்ள பொருத்தமான ஓர் இடத்தை மாநாடு நடத்துவதற்காக அல்லாஹ் நமக்கு வழங்கினான். இது அல்லாஹ்வின் மகத்தான அருளாகும். இங்கு நான் சென்ற சமயத்தில் பெரும்பாலான அஹ்மதி ஆண்களும், பெண்களும் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். ஒரு பெரிய நகரமே அங்கு உருவாகி விட்டது. கானா ஜமாஅத் இந்த நிலத்தை நன்றாக திட்டமிட்டு Develop செய்துள்ளார்கள். அதில் ரோடு அமைத்துள்ளார்கள். பாதைகளை சரி செய்துள்ளார்கள். அதனால் அங்குள்ள ஒவ்வொரு இடத்திற்கும் எளிதாக ஒருவரால் செல்ல முடியும். முழு பகுதியிலுமுள்ள முட்செடிகளையும், புல்களையும் அகற்றி தூய்மையாக வைத்திருந்தார்கள். அந்த ஆப்பிரிக்க நாடுகளிலுள்ள நிலங்கள் மிகவும் பசுமையாக இருக்கின்றது. இங்கு ஐரோப்பாவிலுள்ள நிலங்கள் போன்றே அங்குள்ள நிலங்களும் சிறிதளவு மழை பெய்தால் செடிகள் பசுமையாக வளர ஆரம்பித்து விடுகிறது. இப்போது புதிதாக வாங்கப்பட்டுள்ள இடமும் மிகப் பழமையான பெரிய Poultry Form (கோழிப்பண்ணை) ஆக இருந்தது. அங்கு தேன்கூடுகளும் உள்ளன. அவற்றையெல்லாம் அகற்றி சுத்தப்படுத்தி புதிய

தரைக்கான தளமிடப்பட்டு புதிய ஜன்னல்கள், கதவுகள் போடப்பட்டு அவ்விடத்தை மக்கள் தங்குவதற்குள்ள இடமாக இப்போது ஆக்கியுள்ளார்கள். அவ்வாறிருந்தும் இடம் போதுமான அளவு இல்லாமல் இருந்தாலும் யாரும் எந்த முறையீட்டையும் செய்யவில்லை. ஏனென்றால், மிகப்பெரும் எண்ணிக்கையில் அஹ்மதிகள் அங்கு வந்திருந்தார்கள். பல செல்வச் செழிப்புள்ளவர்களும், வியாபாரிகளும், பள்ளிக்கூடத்தில் பணிபுரியும் ஆசிரியர்களும், மற்ற பல பணிகளைச் செய்பவர்களும் இம்மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். இவர்களுக்கு தங்க போதுமான இடம் கிடைக்கவில்லையென்றால், வெளியில் போர்வையை விரித்து சுகமாக படுத்துத் தூங்கினார்கள். இவ்வகையில் இந்த மக்களிடம் மிகுந்த பொறுமை காணப்படுகிறது. என்னிடம் ஒருவர் கூறினார்: இவ்வாறு சிரமங்கள் இருப்பது பற்றி அவர்களிடம் கேட்ட போது அதற்குப் பதிலாக நாங்கள் மாநாட்டு சொற்பொழிவுகளை கேட்கவே வந்துள்ளோம். காலத்தின் கலீஃபா நம்மிடம் இருக்கும் நிலையில் மாநாடு நடக்கின்றது. இரண்டு நாட்கள் தற்காலிகமாக துன்பங்களை சகித்துக் கொள்வதால் என்ன இழப்பு ஏற்படப் போகின்றது? இந்த மாநாட்டில் நாங்கள் கலந்து கொள்ள அல்லாஹ் எங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளதை நினைத்து நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம் என்று அவர்கள் கூறினார்கள். புதிய இடத்தில் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தால் மாநாடு ஏற்பாடுகளிலும் சில குறைகள் இருந்தன. ஆனால் எவருமே இதைப் பற்றி எந்தக் குறையும் கூறவில்லை. ஏனென்றால், ஏறக்குறைய ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். தலைமையக ஏற்பாட்டின் கீழ் லங்கர் கானா (உணவகம்) ஏற்பாடு செய்வதிலும் இது முதல் அனுபவமாக இருந்தது. அங்குள்ள பொதுவான வழக்கத்திற்கேற்ப ஒவ்வொரு பகுதிகளிலும் அங்குள்ள மக்களுக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாட்டை அந்த பகுதியைச் சேர்ந்தவர்களே செய்யும் அளவில் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்த முறை கானாவிற்கு வெளியிலிருந்தும் ஏறக்குறைய 5000 நபர்கள் வந்திருந்தனர். எனவே இவ்வகையில் அமைப்பு ரீதியாக சில சிரமங்கள் ஏற்பட்டன. ஒரு நாள் Borkinofasu வைச் சார்ந்த சில சகோதரர்களுக்கு உணவு கிடைக்காமல் இருந்தது எனக்கு தெரிய வந்தது. Borkinofasu விலிருந்தும் ஏறக்குறைய 3000 பேர் வந்திருந்தார்கள். அங்கிருந்துதான் எல்லாரையும் விட அதிகமான எண்ணிக்கையில் ஜமாஅத் சகோதரர்கள் வந்திருந்தனர். Borkinofasu கானாவிற்கு பக்கத்திலுள்ள நாடாகும். ஏறக்குறைய 300 குத்தாம்கள் 1600 கிலோ மீட்டர் சைக்கிளில் பயணம் மேற்கொண்டு அங்கிருந்து மாநாட்டிற்கு வந்துள்ளார்கள். இவர்களோடு வந்திருந்த முபல்லிக் சாஹிபிடம் நான் இவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை என்பதற்காக வருத்தத்தை தெரிவித்து மன்னிப்பு கேளுங்கள் என்று நான் கூறினேன். இனியும் இவர்களது தேவையை கருத்தில் கொள்ள வேண்டும் என்று நான் கூறினேன். அவர்கள் நான் கூறியதற்கேற்ப அவர்களிடம் மன்னிப்பு கேட்ட போது நாங்கள் எந்த நோக்கத்திற்காக இங்கு வந்திருக்கின்றோமோ அந்த நோக்கம் நிறைவேறி விட்டது. உணவு பற்றிய கவலை எதற்கு? தினமும் சாப்பிடத்தான் செய்கின்றோம். ஆனால் எந்த உணவை நாங்கள் இப்போது பெற்றுக் கொண்டிருக்கின்றோமோ அது ஒவ்வொரு நாளும் எங்கிருந்து கிடைக்கப் போகின்றது? என்று அந்த மக்கள் பதில் கூறினார்கள். Borkinofasu விலுள்ள ஜமாஅத் மிகவும் பழைய ஜமாஅத் அல்ல. இவற்றில் பெரும்பாலான ஜமாஅத்துகள் கடந்த 10 அல்லது 15 வருடங்களில் நிறுவப்பட்டதாகும். ஆனால் மனத்தூய்மையிலும், நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதிலும் அன்பிலும் இவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களிடமுள்ள ஏழ்மையின் நிலைமை எவ்வாறிருந்ததென்றால் சிலரிடம் ஒரேயொரு ஆடை மட்டுமே இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போல் மிக அரிதாக அவர்களது உடலில் ஆடை இருந்தது என்ற அதே நிலை அவர்களிடம் காணப்பட்டது. ஆனால் பைசாக்களை சேகரித்து மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். இது கிலாஃபத் ஜூப்ளியின் மாநாடாகும். கலீஃபா நம்மிடம் வந்திருக்கின்றார்கள். எனவே கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு மக்கள் மாநாட்டிற்கு வந்துள்ளார்கள். இப்படிப்பட்ட அன்பை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரால்

உருவாக்க முடியும்? சைக்கிள்களில் வந்த குத்தாம்களின் மனத்தூய்மையை கணிப்பதற்கு ஒரு விஷயத்தைக் கூறுகின்றேன். இவர்கள் பல இடங்களில் கூடாரமிட்டு தங்கியவாறு 7 நாட்கள் தொடராக சைக்கிளில் இவர்கள் பயணம் செய்தார்கள். இவ்வாறு பயணம் செய்தவர்களில் 50 வயதிற்கு மேல் 60 வயதிற்கு உட்பட்ட அன்ஸார்களும் இருந்தார்கள். அவ்வாறே 13 அல்லது 14 வயதுடைய சிறுவர்களும் இவ்வாறு சைக்கிளில் பயணம் செய்துள்ளார்கள். Borkinofasu வின் அமீர் சாஹிப் அவர்கள் இந்த சிறுவர்களிடம் மிக நீண்ட பயணமாக இருப்பதால் இந்த பயணத்தில் நீங்கள் செல்ல முடியாது என்று கூறியதும் இந்த சிறுவர்கள் மிகவும் கவலையடைந்தனர். அவர்களது முஅல்லிம் சாஹிபிற்கு பின்னால் ஓடியவாறு நாங்களும் கண்டிப்பாக பயணத்தில் வர வேண்டும் என்பதை அமீர் சாஹிபிடம் கூறுங்கள் என்று அவரிடம் கூறினார்கள். பிறகு இந்த சிறுவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. பிறகு அவர்கள் இந்த முழு பயணத்தையும் மிகவும் மகிழ்ச்சியுடன் கழித்தார்கள்.

அங்கு சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் இருக்கின்றார்கள். யாரோ ஒருவர் இதுபற்றி கேட்டதற்கு அவர் இவ்வாறு கூறினார். ஆரம்பகால முஸ்லிம்கள் இஸ்லாத்திற்காக பெரும் தியாகங்களை செய்துள்ளார்கள். நமது குத்தாம்களும் எல்லா விதமான தியாகங்களுக்காகவும் தயாராக இருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம். கிலாஃபத் ஜூபிளி தொடர்பாக நாம் ஒரு சிறப்பான ஒரு பணியை செய்ய வேண்டும். அதன் மூலம் கிலாஃபத் மீது நமக்கு இருக்கும் அன்பும் மனத்தூய்மையும் வெளிப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். நாங்கள் ஒவ்வொரு தியாகத்திற்காகவும் தயாராக இருக்கின்றோம் என்பதையும், அதற்காக எல்லா சவால்களையும் சந்திக்க தயாராக இருக்கின்றோம் என்பதையும் காலத்தின் கலீஃபாவுக்கு தெரிவிக்க நாங்கள் விரும்பினோம். அதன் அடிப்படையில் கானாவின் ஆண்டு மாநாட்டிற்கு சைக்கிளில் செல்லும் திட்டத்தை அறிவித்தோம். இதைக் கேட்ட குத்தாம்கள் லப்பைக் (நாங்கள் ஏற்றுக் கொண்டோம்) என்று கூறினார்கள். 1435 குத்தாம்கள் இந்த சைக்கிள் பயணத்தில் கலந்து கொள்ள தங்களது பெயர்களை தந்தார்கள். ஆனால் அமைப்பு ரீதியாக இருந்த சில சிரமங்கள் காரணமாக இவர்களில் 300 பேர்களை நாங்கள் தேர்ந்தெடுத்தோம். சைக்கிளில் பயணம் செய்த இவர்கள் மிக உயர்ந்த ரகத்திலுள்ள புதிய சைக்கிள்களில் பயணம் செய்யவில்லை. மாறாக, பழைய துருப்பிடித்த சைக்கிள்களில் இவர்கள் வந்தார்கள். சில சைக்கிள்களில் பிரேக் இல்லை. சில சைக்கிள்களில் டயர் தேய்ந்து போயிருந்தது. ஆனால் அவர்களிடம் உணர்வும் அன்பும் இருந்தது. அஹ்மதிய்யா கிலாஃபத்திற்காக அவர்களிடம் இந்த அளப்பரிய அன்பும் மனத்தூய்மையும் வெளிப்பட்டது.

மீடியாக்களும் இந்த காட்சியைக் கண்டு அதை கவரேஜ் செய்திருக்கின்றது. டி.வி யின் பிரதிநிதிகள் சைக்கிள் பயணம் ஆரம்பமாவதற்கு முன்பு இவர்களிடம் சைக்கிள்களின் நிலை மிக மோசமாக இருக்கின்றது. நீங்கள் எப்படி இவ்வளவு பெரிய பயணத்தை மேற்கொள்ள முடியும்? என்று கேட்டார்கள். அதற்கு நமது ஜமாஅத் பிரதிநிதிகள் சைக்கிள்கள் மோசமாக இருந்தாலும் எங்களது ஈமானும் தைரியமும் மகத்தானதாகும். நாங்கள் கிலாஃபத்தின் அருட்கொடைக்கு நன்றி கூறியவாறு இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றோம். நேஷனல் டிவி இந்த செய்தியை ஒளிபரப்பிய போது அதன் ஆரம்ப செய்தியாக, அல்லாஹ்வுக்காக கிலாஃபத் ஜூப்ளியையொட்டி வாகாவிலிருந்து அக்ரா வரை சைக்கிள் பயணம். சைக்கிள் மோசமாக இருந்தாலும் ஈமான் மிகவும் வலுவாக இருக்கின்றது என்று செய்தி ஒளிபரப்பியது. பிறகு டிவி இந்த சைக்கிள்களின் நிலைமையையும் மக்களுக்கு காட்டியது. எவ்வளவு மோசமாக இவை இருந்தன என்பதும் இவர்களுக்கு தெரிய வந்தது. குத்தாம்களிடம் அவர்கள் இதுபற்றி கேள்விகளை கேட்டனர். நீங்கள் எதற்காக இவ்வாறு பயணம் மேற்கொள்கின்றீர்கள்? என்றும் கேள்வி கேட்கப்பட்டது. ஒரு காதிம் எங்கள் கலீஃபாவை சந்திக்க

செல்கின்றேன் என்று கூறினார். இன்னொரு காதிம் அஹ்மதிய்யா கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி அதன் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள எங்கள் கலீஃபா வருகின்றார்கள். நாங்கள் அதில் கலந்து கொள்ள செல்கின்றோம் என்று கூறினார். இதுதான் அவர்களது உணர்வுகளாகும். இவர்கள் பிறப்பால் அஹ்மதிகளல்ல. சஹாபாக்களின் சந்ததிகளும் அல்ல. மாறாக சீர்செய்யப்படாத தெருக்களுள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தும் இங்கு மாநாட்டிற்கு வந்துள்ளார்கள். சில வருடங்களுக்கு முன்னர்தான் இவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தண்ணீர், மின்சாரம் ஆகிய வசதிகள் இல்லாத இடங்களில் இவர்கள் வசித்து வருகின்றார்கள். இப்போது சில இடங்களில் டிஷ் ஆன்டன்னா வைக்கப்பட்டு MTA மூலம் அவர்களுக்கு தொடர்ந்து தொடர்பு இருக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. சில இடங்களில் வறுமையால் இவர்களது நிலை மிக மோசமாக இருக்கின்றது. ஆனால், ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் ஜமாஅத்தில் இணைந்து இவர்களிடம் எத்தகைய மனத்தூய்மை உருவாகி இருக்கின்றதென்றால் மார்க்கத்தின் தேவைக்காக செயலாற்றுவதில் இவர்களது தைரியம் பாறாங்கல் போன்று உறுதியாக இருக்கின்றது. அவர்கள் எல்லா தியாகங்களுக்காகவும் தயாராக இருக்கின்றார்கள். அன்பு உணர்வுகளால் நிரம்பி காணப்படுகின்றார்கள். அல்லாஹ் இவர்களது மனத்தூய்மையை அதிகரிக்கும்படி செய்வானாக!

Borkinofosu வில் உள்ள ஒரு சகோதரர் ஈஸா ஸியாமா சாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள். நான் 2005 ஆம் ஆண்டு பைஅத் செய்தேன். ஆனால் இன்றுதான் நான் யார்? என்பது எனக்குத் தெரிகிறது. எவ்வளவு நற்பாக்கியம் பெற்றவனாக நான் இருக்கின்றேன். நான் எதைப் பெற்றுள்ளேன்? என்று எனக்கு தெரிகிறது. எனது மகிழ்ச்சியை எனது சொற்களில் நான் வெளிப்படுத்த முடியாது என்று இவர் கூறினார்.

சிலருக்கு கிலாஃபத் மீதுள்ள அன்பு கண்ணீரின் வடிவத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. சில துர்பாக்கியசாலிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மீது ஆட்சேபணை செய்யும்போது மிர்ஸா சாஹிப் உங்களுக்கு என்ன வழங்கியுள்ளார் என்று கேட்கின்றார்கள். அவர்கள் இந்த மக்களை பார்க்கட்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் இறைவன் அவர்களது உள்ளங்களில் எத்தகைய புரட்சியை ஏற்படுத்தியுள்ளான். மேலும் கலீஃபத்துல் மஸீஹிடம் அவர்களுக்கு எத்தகைய அன்பை அவர்கள் உருவாக்கி விட்டார்கள் என்றால் அதை சொற்களால் என்னால் கூற முடியாது.

கேம்பியாவிலிருந்து 22 நபர்களை கொண்ட ஒரு குழு வந்திருந்தது. ஏழ்மையின் காரணமாக இவர்கள் பேருந்துகளில் பயணம் செய்து Senegal, Mali, Borkinofasu ஆகிய மூன்று பெரிய நாடுகளை கடந்து 5 நாட்களாக ஏறக்குறைய 7,000 கிலோ மீட்டர் பயணம் செய்து இவர்கள் கானாவிற்கு வந்து சேர்ந்தார்கள். பயணத்தால் ஏற்பட்ட சோர்வால் அவர்கள் மிகுந்த களைப்பாக இருந்தார்கள். இந்த நாடுகளில் ரோடும் சீராக இருக்காது. பேருந்துகளின் தரமும் நன்றாக இருக்காது. ஆப்பிரிக்காவில் பேருந்துகளில் பயணம் செய்தவர்களுக்கு இதைப் பற்றி தெரியும். ஆனால், இவர்கள் மாநாட்டு திடலுக்கு வந்ததும் உடனடியாக அவர்கள் ஓய்வெடுக்கும் இடத்தை தேடுவதற்குப் பதிலாக அப்போது தொழுகையின் நேரமாக இருந்ததால் தொழுவதற்கான இடத்திற்கு அவர்கள் நேராக சென்றார்கள். ஆனால், இந்த முஹம்மதிய மஸீஹின் அடிமைகள் மிக நீண்டதும், சோர்வுக்கு ஆளாகக்கூடியதுமான பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள் என்பது வெளிப்படையாக இவர்களின் எவரது முகத்திலும் தெரியவில்லை. விரிவான ரிப்போர்ட் இதற்குப் பிறகு அல் ஃபஸ்ல் பத்திரிகையில் வந்து கொண்டேயிருக்கும். எவருக்கு படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமோ அவர்கள் அதை படிக்க வேண்டும்.

Ivory Coast லிருந்தும் 1,000 நபர்களைக் கொண்ட ஒரு குழு மிக நீண்டதும் சோர்வுக்கு ஆளாகக் கூடியதுமான பயணத்தை மேற்கொண்டு கானா வந்து சேர்ந்தது. ஆனால்

மனத்தூய்மையிலும், தங்களை அர்ப்பணிக்கும் தன்மையிலும் அன்பிலும் எந்த அளவு அவர்கள் முன்னேறியிருந்தனர் என்றால் அவர்கள் தங்கள் முகங்களில் சோர்வின் எந்த அடையாளத்தையும் வரவிடவில்லை.

அல்லாஹ் உள்ளூரிலுள்ள சில அஹ்மதிகளுக்கும் ஏழை அஹ்மதி களுக்கான பயணச் செலவை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தையும் வழங்கியுள்ளான். சிலருக்கு பயணத்திற்கான பொருள் செலவை அவர்கள் ஏற்று அவர்களால் வர முடியாமல் ஆனபோது அவர்களது கண்களில் கண்ணீர் வழிந்தது. இவர்களது மனத்தூய்மை மற்றும் அன்புக்கு எதிரில் எவரால் போட்டி போட முடியும்?

பிறகு கிலாஃபத் ஜூப்ளி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்த ஏழைகள் என்னென்ன வழிமுறைகளை மேற்கொண்டுள்ளார்கள்? இதைப் பற்றியும் ஒரு சில சம்பவங்களை நீங்கள் கேளுங்கள்.

Ivory Coast ல் உள்ள ஒரு ஜமாஅத்தை சார்ந்தவர்கள் கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைவதால் அதற்கு பொருத்தமாக இருக்கும் வகையில் நமது கிராமத்திலுள்ள 100 நபர்கள் கானாவில் நடைபெறும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என அவர்கள் முடிவு செய்தார்கள். இவர்கள் மிகவும் ஏழைகளாக இருந்தார்கள். ஆனால் இவர்களது தைரியத்திற்கு முன்னால் மலையும் அற்பமாக தென்படுகிறது. இந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்காக கானாவில் ஆண்டு மாநாடு நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் இதற்காகவே ஒரு வயலை அவர்கள் தயார் செய்தார்கள். அதற்காக தானியங்களின் விதைகள் விதைக்கப் பட்டன. அந்த வயலில் கிடைக்கும் முழு வருமானத்தையும் கானா மாநாட்டிற்கு செல்வதற்கான போக்குவரத்து செலவுக்காக செலவிட வேண்டும் என அவர்கள் முடிவு செய்தார்கள். அல்லாஹ்வும் அத்தகைய மனத்தூய்மையுள்ள தனது அடியார்களின் பணிகளின் மீது தனது அன்பான பார்வையை செலுத்தியுள்ளான். அல்லாஹ் இவர்கள் விதைகளில் அருள் செய்தான். அந்த வயலின் மூலம் அதிக வருமானம் கிடைத்தது. அதனால் 100 பேர்கள் செல்வதற்குப் பதிலாக மொத்தம் 103 பேர்கள் மாநாட்டிற்குச் செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. Ivory Coast ல் உள்ள செஸ்தாவன் என்ற கிராமத்திலிருந்து மாநாட்டிற்கு வந்தவர்களில் 23 பேர் பெண்களாவார்கள். இவர்கள் கடன் வாங்கி போக்குவரத்திற்கான செலவை செய்தார்கள். எங்களது இந்த அருளுக்குரிய பயணத்தின் காரணமாக எங்களது வயல்களின் விளைச்சலில் அல்லாஹ் அருள் செய்வான். அதன் மூலம் எங்களது கடனை நாங்கள் திருப்பிச் செலுத்தி விடுவோம். இறைவனின் கருணை மீது நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம் என்று அந்த பெண்கள் கூறினார்கள். இதன் மூலமாக எங்களது மற்ற தேவைகளும் நிறைவேறி விடும் என அவர்கள் நம்பிக்கையுடன் கூறினார்கள்.

ஒரு பகுதியைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள், சிறுவர்கள் ஆகியோரின் நிலைமையைப் பற்றி கூறுகின்றேன். இந்த சிறுமிகளுக்கு 12 அல்லது 13 வயதுதான் இருக்கும். தங்களது போக்குவரத்துச் செலவுக்கான தொகையை ஒப்படைப்பதற்காக அவர்கள் வந்தார்கள். அப்போது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எந்த நாளிலிருந்து ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கானா வரும் செய்தி எங்களுக்கு கிடைத்ததோ அந்த நாளிலிருந்தே ஒரு வயலில் நாங்கள் வேலை செய்ய ஆரம்பித்தோம். அதன் மூலம் எங்களை போன்ற ஏழை மக்களும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹை காண்கின்ற அந்த அருளைப் பெற வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். நாங்கள் உழைத்து சம்பாதித்துள்ள இந்த தொகையை பயணச் செலவுக்காக உங்களிடம் தருகின்றோம்.

Ivory Coast ஐச் சார்ந்த ஒரு பெண் ஹபீபா என்பவர் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்தார். கடுமையாக அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு TB அல்லது இதைப் போன்ற

வேறு ஏதோ நோய் இருந்தது. இந்த பெண்ணின் சகோதரரும் கணவரும் கூறிய விபரம் என்னவென்றால் இந்த பெண் தனது கிராமத்திலிருந்து மாநாட்டிற்காக வரும் தனது வீட்டிலுள்ளவர்களிடம் எனக்கு நோய் இருந்தும் கிலா஁பத் ஜுபிளியின் மாநாட்டில் செல்வதற்காக நான் செல்கின்றேன். நான் திரும்பி வரமாட்டேன் என்று எனக்கு தோன்றுகிறது. எனவே நான் செய்த தவறுகளை மன்னித்து விடுங்கள் என்று கூறினார்.

ஏற்கனவே கடுமையான நோய்க்கு ஆளாகியிருந்த காரணத்தால் பயண களைப்பும் சேர்ந்து அவரது நோய் மேலும் அதிகமானது. வெப்பம் அதிகமாக இருக்கும் சமயத்தில் மிக நீண்ட பயணத்தில் அவர் இங்கு வந்து சேர்ந்தார். இங்கு வந்து ஒரு நாள் கழிந்ததும் என்னை அவர் சந்தித்தார். அதற்கு ஒரு நாள் கழிந்த பிறகு அவர் வஃபாத் ஆகி விட்டார். நான் அவருக்காக ஜனாஸா தொழுகை தொழ வைத்தேன்.

1980 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கானாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது நான் அங்கிருந்தேன். அப்போது ஹுஸுர் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்கள் நைஜீரியாவிலிருந்து கானாவிற்கு வந்தார்கள். நைஜீரியாவில் அவர்களுக்கு மிகச் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அல் ஃபஸ்ல் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த மதிப்பிற்குரிய மஸ்வூத் தெஹ்லவி சாஹிப் அவர்கள் ஹுஸுருடன் இருந்தார்கள். ரிப்போர்ட்டினை அவர்கள்தான் எழுதி வந்தார்கள். நைஜீரியாவில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியைப் பார்த்து ஆயிரக்கணக்கான மக்களின் உற்சாகமான வரவேற்பு என அவர் தனது அறிக்கையில் எழுதினார். பிறகு கானாவில் மக்கள் கூட்டத்தைப் பார்த்ததும் அது நைஜீரியாவை விட அதிகமாக இருந்ததைக் கண்டதும் அதைப் பற்றி கடல் அலைகள் போன்ற அஹ்மதி ஆண்கள், பெண்கள் ஆகியோரின் கூட்டம் என தமது ரிப்போர்ட்டில் எழுதினார். எனவே, உண்மையில் கானாவின் ஜமாஅத் எழுச்சியுடன் மோதுகின்ற கடல் அலைகளைப் போன்றே இருக்கின்றார்கள். கிலாஃபத் மீதுள்ள அன்பு இவர்களது உள்ளம், முகம், கண்கள், ஆன்மா ஆகியவற்றிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தன.

இப்போது கானாவிலுள்ள ஜமாஅத் புதிதாக அங்கு பைஅத் செய்தவர்கள் காரணமாக மேலும் விரிவடைந்துள்ளது. மனத்தூய்மையில் முன்னவர்களின் அதே நிறத்தை இவர்களும் பெற்றுக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஜுமுஆவில் மக்கள் எவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் கலந்து கொண்டார்கள் என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். Ivory Coast லிருந்து வந்த ஒரு சகோதரர் ஹஜ்ஜில் எந்த அளவு மக்கள் ஒன்று கூடுகின்றார்களோ அதற்கு அடுத்தபடியாக இவ்வளவு பெரிய கூட்டத்தை இப்போதுதான் நான் பார்க்கின்றேன் என்று கூறினார். கானாவில் உள்ளவர்கள் ஏறக்குறைய ஒரு மணி நேரம் வெயிலில் அமர்ந்தவாறு மிகவும் பொறுமையுடன் எனது குத்பாவை கேட்டுக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமல்ல. தஹஜ்ஜுத் தொழுகையின் போதும் ஃபஜ்ர் தொழுகையின் போதும் ஜுமுஆவில் வந்த அதே எண்ணிக்கையில் மக்கள் கூட்டம் இருந்தைப் பார்க்க முடிந்தது. மாநாட்டில் கலந்து கொண்ட பெண்களின் எண்ணிக்கை 50,000 ஆகும். மாநாட்டின் கடைசி நாளான சனிக்கிழமையன்று விடுமுறை நாளாக இருந்ததால் ஜுமுஆவில் கலந்து கொண்டதை விட அதிக எண்ணிக்கையில் ஆண்களும், பெண்களும் சுபுஹ் தொழுகைக்கு வந்திருந்தார்கள். தொழுகைக்கு பிறகு ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை நான் தங்கியிருந்த வீட்டிற்கு நான் திரும்பி செல்லும் வழியில் நீண்ட வரிசையில் ஆண்களும் பெண்களும் நின்றதன் காரணமாக எனது கார் ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பெண்கள் தங்கள் குழந்தைகளை கையில் தூக்கியவாறு அவர்களை எனக்கு ஸலாம் கூற வைத்தார்கள். இரு சகோதரர்கள் அல்லது சகோதரிகள் சந்திப்பதைப் போல் மிகவும் அன்புடன் அவர்கள் என்னை சந்தித்தார்கள்.

கானாவில் லங்கர் கானாவின் முழு ஏற்பாட்டையும் பெண்களே ஏற்று செய்தார்கள். உலகின் மற்ற பகுதிகளில் ஆண்கள் செய்யும் இந்தப் பணியை கானாவில் பெண்கள் செய்தார்கள். நான் ஒரு நாள் சுபுஹ் தொழுகைக்கு பிறகு லங்கர் கானாவை பார்வையிடச் சென்றேன். பெண்கள் தங்குமிடமும் லங்கர் கானாவிற்கு அருகில் இருந்ததால் எனது வருகையைப் பற்றி பெண்களுக்கு தெரிந்ததும் அவர்கள் அங்கு ஒன்றுகூடி விட்டார்கள். லங்கர் கானாவில் பணியில் இருந்த பெண்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. இந்த எல்லா பெண்களின் நாரே தக்பீர் முழக்கம் விண்ணைத் தொடும் அளவில் இருந்தது. உணர்வு பொங்க அவர்களது முழக்கங்கள் இருந்தன. லங்கர் கானா சென்ற நான் சிறிது தூரம் சென்று விட்டு மீண்டும் திரும்பி வந்து விட்டேன். அதற்கு காரணம் இந்த உணர்விலேயே அடுப்பில் உள்ள அண்டாக்களை கவனிக்காமல் இருந்து விடக் கூடாது. நெருப்பு எரிவதைக் கவனிக்காமல் இருந்து விடக் கூடாது என நான் அஞ்சினேன். யாருக்கும் எவ்வித அபாயமும் ஏற்பட்டு விடக்கூடாது என்று கருதிய நான் இந்த அபாயத்தை கருத்தில் கொண்டு திரும்பி வந்து விட்டேன்.

குத்தாம்களின் பொறுமையும் அவர்கள் டியூட்டி கொடுத்த விதமும் மிக உயர்ந்த தரத்தில் இருந்ததை என்னால் பார்க்க முடிந்தது. ஒரு நாள் கடுமையான புயல் வீசியது. மழையும் பெய்தது. நான் தங்கியிருந்த அறையிலுள்ள ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்த போது மாநாட்டு திடலில் குத்தாம்கள் அந்த சமயத்திலும் வெளியில் டியூட்டியில் நின்று கொண்டிருந்தார்கள். குடை இல்லாமல் மழையில் அவர்கள் நின்று கொண்டிருந்ததன் மூலம் யார் எங்கள் உறுதியான பாதங்களை தடுமாறச் செய்ய முடியும்? என்று கேட்பது போல் அவர்களது நிலை இருந்தது. இதுதான் கானாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் மிக சுருக்கமான விபரமாகும்.

கானாவிலிருந்து புறப்பட்டு நைஜீரியா சென்று அங்கு ஒரு நாள் தங்கி விட்டு நாங்கள் பெனின் சென்றோம். அங்குள்ள அமீரும் முபல்லிக் Incharch ம் Porthonovo என்ற இடத்தில் 4 வருடங்களுக்கு முன் அடிக்கல் நாட்டப்பட்டு இப்போது முழுமையாக கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிவாசலை நான் திறந்து வைக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் வேண்டுகோளை ஏற்று அதற்கேற்ப நான் அங்கு சென்ற சமயத்தில் தற்செயலாக அங்குள்ள ஜமாஅத்தின் மாநாடும் அதே நாட்களில் அங்கு நடந்து கொண்டிருந்தது. இது பெனினில் உள்ள புதிய ஜமாஅத்தாகும். இவர்களில் பெரும்பாலார் புதிதாக பைஅத் செய்தவர்கள் ஆவார்கள். எனவே முதலில் பெனின் செல்வது எனது programme-ல் இல்லாமல் இருந்தும் programme-ல் சில மாற்றங்கள் செய்யப்பட்டு நான் அங்கு சென்று மாநாட்டில் கலந்து கொண்டேன். நைஜீரியாவிலிருந்து எல்லையை கடந்து பெனினில் நுழைந்த சமயத்தில் அங்குள்ள அமைச்சர்கள் என்னை வரவேற்க வந்திருந்தார்கள்.

கடந்த சுற்றுப் பயணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெனினில் அரசாங்க அளவில் பெரும் மாற்றங்கள் உருவாகியுள்ளன. மாநாட்டில் 22,000 பேர் கலந்து கொண்டனர். அஹ்மதிகளை சந்திப்பது எனக்கு நோக்கமாக இருந்தது. புதிதாக பைஅத் செய்தவர்கள் அஹ்மதிய்யத்தை புரிந்து கொள்வதில் முன்னேறி வருகின்றார்கள். இவர்களது மனத்தூய்மை வளர்ச்சியடைந்துள்ளது. அல்லாஹ் ஜமாஅத் மீதுள்ள அன்பிலும் மனத்தூய்மையிலும் அவர்கள் வளர்ச்சியடையும்படி செய்வானாக!

சுற்றுப் பயணங்கள் மூலம் நமது அஹ்மதிகளுடன் உள்ள தொடர்பு வளர்ச்சி அடைவதுடன் தப்லீகிற்கான வழிகளும் திறக்கப்பட்டுள்ளது. பெனினைச் சேர்ந்த நமது அஹ்மதி சகோதரர் இப்ராஹீம் சாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள். அதாவது அவருடைய ஒரு முஸ்லிம் நண்பர் அவரிடம் நான் உங்களது இமாமின் குத்பாவை நேஷனல் டிவியில் கேட்டேன். அதில் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு திருக்குர்ஆனில் சில வசனங்களுக்கு அவர் கூறிய விளக்கத்தைக் கேட்டேன். நான் ஒரு நீண்ட காலமாக அஹ்மதிகள் தொழுவதே யில்லை என்றே கேள்விப்பட்டேன்.

இவ்வளவு பெரிய பொய்யை ஒவ்வொரு நாளும் நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம் என்பதை எண்ணி நான் வியப்படைகின்றேன். இப்போது நீங்கள் தொழுவதை என் கண்களால் நான் பார்க்கின்றேன் என்று கூறியுள்ளார். ஆக சுற்றுப்பயணத்தால் நமக்கு கிடைக்கும் இன்னொரு பயன் மீடியா இதனை முழுமையாக கவரேஜ் செய்வதால் தப்லீக்கும் நடக்கின்றது.

நமது ஒரு அஹ்மதி சகோதரரை ஒரு அஹ்மதியல்லாத சகோதரர் சந்திக்க வந்தார். பல விஷயங்களையும் அந்த அஹ்மதி சகோதரரிடம் கூறிய பிறகு இறுதியாக நிச்சயமாக உங்களது கலீஃபத்துல் மஸீஹின் சுற்றுப்பயணம் வழக்கத்திற்கு மாற்றமாக மிகுந்த அருள்களை கொண்ட சுற்றுப்பயணமாக இருக்கின்றது என்று கூறியுள்ளார். எனவே, இந்த அருள்கள் இப்போது மற்றவர்களுக்கும் தெரிய ஆரம்பித்திருக்கின்றது. பிறகு நாட்டின் ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகர் ஆக இருக்கும் ஹாஜா மாதாம் கிராஸ் லாவானி என்ற பெண்மணி என்னை சந்திக்க வந்திருந்தார். அந்த பெண் என்னை மிஷன் ஹவ்ஸில் சந்திப்பதற்காக வந்திருந்தார். நான் அங்கிருந்து வந்த பிறகு மீண்டும் அவர் நமது மிஷன் ஹவுஸிற்கு சென்றார். அங்கிருந்தவர்களிடம் கலீஃபத்துல் மஸீஹ் இங்கிருந்து மகிழ்ச்சியுடன் திரும்பினார்களா? என்பதை நான் அறிந்து கொள்வதற்காகவே இங்கு வந்தேன். பிறகு நான் பள்ளிவாசலில் ஜுமுஆ தொழுவதற்காக வந்தேன். நான் பல இமாம்கள் குத்பா நிகழ்த்துவதை கேட்டுள்ளேன். அவர்கள் திருக்குர்ஆனின் பல வசனங்களை ஓதுவார்கள். கிளியைப் போன்று வசனங்களைப் படித்துக் கொண்டே செல்வார்கள். ஆனால் எவ்வாறு கலீஃபா அவர்கள் திருக்குர்ஆனை ஓதி அந்த வசனங்களை எங்களுக்கு புரிய வைத்தார்களோ அது எனது ஆன்மாவிலும், உள்ளத்தில் ஆழம் வரையிலும் இறங்கி விட்டது. இவ்வாறு திருக்குர்ஆனை வேறு எவரும் புரிய வைப்பதை நான் இதுவரை கேட்டதேயில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இப்போது அவர் அஹ்மதிய்யத்திற்கு மிகவும் அருகில் வந்து விட்டார். அவர் பைஅத் செய்து விடுவார் என்ற நம்பிக்கை இருக்கிறது இன்ஷா அல்லாஹ்.

பெனினிலிருந்து நாங்கள் மீண்டும் நைஜீரியாவிற்கு திரும்பினோம். நைஜீரியாவின் எல்லையை அடைந்ததும் அமீர் சாஹிப் அவர்கள் இங்கு புதிய இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டிருக்கின்றது என்று கூறி அங்கு வரும்படி என்னை அழைத்தார்கள். அங்கு செல்வது எனது Programme-ல் இல்லாமல் இருந்தாலும் மெயின் ரோட்டிலிருந்து இறங்கி பத்து அல்லது பன்னிரெண்டு மைல் தூரம் மிக சிரமத்துடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டும் அங்கு சென்று நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அது ஒரு சிற்றூராகும். நைஜீரியாவின் தென் பகுதியில் பழைய ஜமாஅத்துகள் உள்ளன. 2004 ஆம் ஆண்டு அங்கு நான் சென்ற சமயத்தில் அங்குள்ளவர்களின் மனத்தூய்மையை என்னால் கணிக்க முடிந்தது. இவர்களும் எந்த வகையிலும் பின்தங்கியிருக்கவில்லை. இவர்களின் உள்ளத்திலிருந்து அன்பின் உணர்வுகள் பீறிட்டு எழுந்திருக்கின்றது. எவ்வாறு இருப்பினும் அங்கு நான் சென்றதும் அமீர் சாஹிபிற்கு நான் மிகவும் நன்றி என்று கூறினேன். ஏனென்றால், முழு ஜமாஅத்துமே எனக்காக அங்கு காத்து நின்றார்கள். நான் கண்டிப்பாக அங்கு வருவேன் என்று அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. பள்ளிவாசலில் நான் நுழைவதற்கு முன்னதாக ஒவ்வொரு இளைஞரும், முதியவரும், சிறுவரும் என்னை சந்திக்க வேண்டும் என விருப்பம் தெரிவித்தார்கள். பெண்களும் மிக அருகில் வந்து என்னை பார்க்க வேண்டும் என்று விரும்பினார்கள். நேரம் குறைவாக இருந்ததால் அவர்(ஆண்)களுக்கு கை கொடுப்பதற்குக் கூட சாத்தியமில்லாத நிலை இருந்தது. சிலர் மிகவும் வலியுறுத்திக் கேட்டுக் கை குலுக்கினார்கள். இந்த பெருங் கூட்டத்தில் எங்களது சுற்றுப் பயணத்தில் என்னுடன் இருந்த ஒரு சகோதரர் ஒருவர் ஒரு பெண்ணைப் பார்த்து நீங்கள் பின்னால் செல்லுங்கள் என்று கூறி விட்டார். அதனால் அந்த பெண்ணுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. கோபத்தால் இப்படி கூறிய அவரை அந்த பெண் தூக்கி வெளியில் எறிந்து விடுவார் போல தெரிந்தது. எனக்கும் காலத்தின் கலீஃபாவுக்கும் இடையில் வர

நீங்கள் யார்? என்று அந்தப் பெண் அந்த சகோதரரிடம் கேட்டார். அவர் அறிவுடன் செயல்பட்டு அங்கிருந்து நகர்ந்து ஒதுங்கிச் சென்று விட்டார். ஆனால், அங்குள்ள பெண்கள் எவ்வளவு வலிமைமிக்கவர்கள் என்றால் மற்றவர்களை தூக்கி வெளியில் எறிவது அவர்களுக்கு கஷ்டமான காரியமல்ல. உணர்ச்சி வசப்படும்போது மனிதனுக்கு தானாகவே அதிகமாக சக்தி வந்து விடும். கொஞ்ச நேரம் அமைதியாக இருக்கும்படி கூறினேன். அப்போது நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் அங்கிருந்த அஹ்மதிகள் அமைதியாக இருந்தார்கள். எனது Programme -ல் நான் இங்கு வருவது இல்லாமல் இருந்தது. உங்களுக்காகவே நான் இங்கு வந்துள்ளேன் என்று நான் கூறியவுடன் எந்த அளவு விண்ணை தொடும் அளவில் அவர்கள் முழக்கங்களை எழுப்பினார்கள் என்றால் அதன் காரணமாக பள்ளிவாசலின் கூரையே தகர்ந்து விடுவது போல் அது அமைந்தது. பிறகு நான் அந்த முழக்கங்களுக்கிடையில் அவர்களிடம் சிறிது நேரம் பேசி விட்டு பிறகு அவர்களது உணர்வுகள் குளிர்ந்த பிறகு நான் அங்கிருந்து விடைபெற்று சென்றேன். நாங்கள் திரும்பி வரும் வழியில் எங்கெல்லாம் ஜமாஅத்துகள் இருந்ததோ அங்கெல்லாம் வழிநெடுக மக்கள் கூட்டம் வீதிகளில் காத்துக் கொண்டு நிற்பதை என்னால் பார்க்க முடிந்தது. பெண்கள் குழந்தைகளை கையில் தூக்கியவாறு எனது காருடன் ஓடி வந்தார்கள். குழந்தைகளின் கவனத்தையும் எனது பக்கம் திருப்ப அவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அதன் மூலம் கிலாஃபத்தின் மீதுள்ள அன்பு அவர்களது வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறி விட வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள்.

நைஜீரியாவிலும் பக்கத்து நாடுகளிலிருந்தும் குழுக்கள் வந்திருந்தார்கள். அங்கும் கானா மற்றும் பெனின் போன்று அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் என்னை சந்திக்க வந்திருந்தனர். அவர்களின் ஒவ்வொருவரும் ஜமாஅத்தைப் பற்றிய சிறந்த கருத்தை தெரிவித்தனர்.

நைஜீரியா செனெட் மெம்பர் மிகப்பெரும் செல்வந்தர் ஆவார். நன்கு படிததவர். Ph.D படித்துள்ளார். மிகவும் வலியுறுத்தி தனது பகுதிக்கு வரும்படி எனக்கு அவர் அழைப்பு விடுத்தார். Jalsa UK விலும் அவர் கலந்து கொண்டார். என்னை தனது Guest House ல் அவர் தங்க வைத்தார். தனது தாயாரின் பெயரில் அவர் ஒரு ஸ்கூல் திறந்துள்ளார். அந்த ஸ்கூல் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கின்றது. இப்போது அதை இன்னும் விரிவுபடுத்த அவர் விரும்பினார். அதற்காக அவர் அந்த பள்ளிக்கூடத்திற்கு என் மூலமாக அடிக்கல் நாட்டினார். அந்த நிகழ்ச்சியில் பல அரசாங்க அதிகாரிகள் வந்திருந்தார்கள். இவர் அந்த பகுதியின் (Kingdom-ன்) ராஜா ஆவார். அவர் எல்லார் முன்னிலையிலும் வெளிப்படையாக ஜமாஅத் அங்கு செய்துள்ள தொண்டுகளையும் என்னுடன் அவருக்கு இருக்கும் தொடர்பையும் எடுத்துக் கூறினார். அல்லாஹ் அவரது நெஞ்சத்தை மேலும் திறப்பானாக. அதன் மூலமாக அவர் முஹம்மதிய மஸீஹின் அடிமைகளுடன் விரைவில் இணைந்து விடட்டும். அதற்கான தைரியத்தை அல்லாஹ் அவருக்கு வழங்குவானாக.

நைஜீரியாவில் 1940 ஆம் ஆண்டு பெரும் எண்ணிக்கையில் ஒரு குழு அங்குள்ள அமீர் சாஹிப் மற்றும் Missionary Incharge யிடம் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக தனித்திருக்க ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அவர்களிடம் நீங்கள் ஜமாஅத் அமைப்பிற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் அல்லது ஜமாஅத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். பிறகு இந்த குழு தங்களது பள்ளிவாசலுடன் ஜமாஅத்தை விட்டு வெளியேறி விட்டார்கள்.

ஒரு பத்திரிகையின் பிரதிநிதி என்னிடம் இதைப் பற்றி கேட்ட போது நான் அவரிடம இதனால் எங்களுக்கு என்ன இழப்பு ஏற்பட்டது? என்று கேட்டேன். ஜமாஅத் இங்கு வளர்ச்சியடைந்துள்ளது. உலகம் முழுவதும் வளர்ச்சியடைந்து வருகிறது. ஆனால், ஜமாஅத்தை விட்டு பிரிந்து சென்றவர்களுக்கு இன்று வரை எந்த தகுதியும் இல்லாமல் இருப்பதை நாம் கண்கூடாக பார்க்கின்றோம் என்று கூறினேன். ஆனால், அவர்களுக்கு இப்போது இது பற்றிய உணர்வு தாமாகவே

ஏற்பட்டிருக்கின்றது. இவர்களது இமாமும் இன்னொரு பெரியவரும் என்னை சந்திக்க வந்தார்கள். நான் அவர்களிடம் இப்போது எல்லா விஷயங்களும் மிகவும் தெளிவாக தெரிகிறது என்பதை இங்கும் முழு உலகிலும் நீங்கள் கண்டு வருகின்றீர்கள். எனவே, உங்களது பிடிவாதத்தை விட்டு விட்டு எங்களுடன் வந்து சேர்ந்து விடுங்கள். ஜமாஅத்தின் முன்னேற்றம் கிலாஃபத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது. வெளிப்படையில் அவர்கள் நான் கூறியவற்றை நன்றாக கேட்டு விட்டு சென்றார்கள். அல்லாஹ் இவர்களது நெஞ்சத்தை திறப்பானாக. இங்கு நான் ஒரு விஷயத்தை இங்குள்ள முபல்லிக்மார்களுக்கும் உலகிலுள்ள எல்லா முபல்லிக்மார்களுக்கும் கூற விரும்புகின்றேன். நீங்களும் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதிலும் நல்லொழுக்கத்தின் உயர்வான நிலையை அடைவதிலும் இன்னும் அதிகமான முன்னேற்றத்தைப் பெற முயற்சி செய்யுங்கள். நீங்களும் இதை நினைவில் வைத்துக் கவனமூட்டுங்கள். அல்லாஹ்வின் அன்பைப் பெற உயர்வான நல்லொழுக்கத்தை நிலைபெறச் செய்யுங்கள். முன்பை விட அதிகமாக உள்ளூர் மக்களுடன் அன்பு நேசம் ஆகியவற்றின் தொடர்பை நிலைபெறச் செய்யுங்கள். உங்களது உயர்வான முன்மாதிரியும் செயலும் உள்ளூரிலுள்ள அஹ்மதிகளுக்கு நல்லுதாரணமாக திகழ வேண்டும். ஆரம்பத்தில் ஆப்பிரிக்க நாடுகளில் சென்ற நமது பெரியோர்கள், முபல்லிக்மார்கள் ஆகியோரின் சஹாபாக்களும் அடங்குவர். அவர்கள் பெரும் தியாகங்களையும் செய்தார்கள். தங்களது நன்மை, தக்வா ஆகியவற்றின் உயர்வான நல்லுதாரணத்தை அவர்கள் அங்கு நிலைபெறச் செய்தார்கள். இந்த உயர்வான தரத்தைப் பெற உங்களில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

ஜமாஅத்தின் மனத்தூய்மை பற்றியும் நம்பிக்கை பற்றியும் ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

சில நேரங்களில் ஜமாஅத்தில் உள்ளவர்களின் மனத்தூய்மை, ஈமானிலுள்ள வேகம், அன்பு ஆகியவற்றைப் பார்த்து நமக்கு வியப்பு ஏற்படுகிறது. எதுவரையென்றால் எதிரிகளும் இதைக் கண்டு வியப்படைகின்றார்கள். எதிரிகளுக்கு வியப்பு ஏற்படும்போது பொறாமையில் அவர்கள் முன்னேறுகின்றார்கள். இழப்பை ஏற்படுத்துவதற்கான புதிய வழிமுறைகளைத் தேடுவார்கள்.

ஆப்பிரிக்க சுற்றுப்பயணம் தொடர்பாகவும் பொதுவாக ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாகவும் எதிரிகளுக்கு செய்திகள் எட்டும் போது அவர்கள் இழப்பை ஏற்படுத்தும் எல்லா வழிமுறைகளையும் சேகரித்துப் பார்ப்பார்கள். MTA மூலமாக முழு உலகமும் இந்த காட்சியைக் கண்டு கொண்டிருக்கிறது. எனவே நாமும் பொறாமைக்காரர்களின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்கு அல்லாஹ்வின் முன்பு அவனது உதவியைக் கோரியவாறு முன்பை விட அதிகமாக அவன் முன்னால் குனிய வேண்டியது அவசியமாகும்.

கிலாஃபத் ஜூப்ளியையொட்டி பாகிஸ்தானிலும் மவ்லவிகள் தங்களது வலுவான எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். எனவே, அதிகமாக துஆ செய்ய வேண்டிய தேவை இப்போது இருக்கின்றது. எதிர்க்கின்ற பொறாமைக்காரர்களிடம் இருந்து அல்லாஹ் ஜமாஅத்தை மிகைத்து நிற்கச் செய்வான் என்ற வாக்குறுதியை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியிருந்தாலும் நாமும் நமது மனத்தூய்மையிலும், துஆக்கள் செய்வதிலும் முன்பை விட அதிகமாக அல்லாஹ் முன்பு குனிய வேண்டும். அல்லாஹ் நமக்கு முன்னேற்றத்தை வழங்கி முன்னேற்றத்தின் புதிய புதிய இலக்குகளை நமக்குக் காட்டுவானாக! ஆமீன்.

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 09.05.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**